நாள்- 27.06.2023

Case No. OS.5/2013 (PW1 Cross continuation)

PW.1– ராஜேஸ்வரி–பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் கணவருக்கு எந்த விதத்தில் பாகம்வந்த சொத்துக்கள் , என் குடும்பத்திற்கு எந்த வகையில் கிடைத்தது சம்மந்தமான ஆவணங்கள் நான் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. என் மாமனார் பெயரில் சொத்துக்கள் இருந்தது அதற்காகத்தான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் மாமனார் பெயரில் சிட்டா உள்ளது அதை வைத்துதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சிட்டா எந்த வருடத்திற்கு உரியது என்றால் 10 வருடத்திற்கு முன்பு ஏற்பட்டது. அண்ணன், தம்பிகள் தனித்தனியாக பாகம் பிரித்துக்கொண்டு அதன்அடிப்படையில் வாங்கிய சிட்டா கூட்டு உள்ளது. தனித்தனியாக பாகப்பிரிவினை ஏற்பட்டால் தனித்தனியான சிட்டா இருக்கும் என்றால் குடும்பத்தில் உள்ள அனைவரின் பேரும் சேர்ந்துதான் சிட்டா மற்றும் வா.சா.ஆ.1 உள்ளது. சிட்டா ஐய்யா சாமி மகள்கள் பெயரிலும் , கூட்டா சிட்டா உள்ளதா மகள்களுக்கும் பாகம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. என் கணவர் விபத்து ஏற்பட்டு சென்னை அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல வீட்டிற்கு வந்தபிறகு இறந்துவிட்டார். (வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது) . 2ம் பிரதிவாதி வசந்தி என் கணவரின் தங்கை. அவரும் மருத்துவமனையில் இருந்தார். என் கணவர் எனக்கு உயில் எழுதி வைத்துள்ளார். அந்த உயில் வாலாஜா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (எதிர்வழக்குரையில் சொல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது) உயில் பதிவு செய்த அன்றே என் கணவர் இறந்துவிட்டார். என் கணவருக்கு விபத்தில் அடிப்பட்டதால் இடுப்புக்கு கீழே உணர்வு இல்லை ஆனால் பேசும் நிலையில்தான் இருந்தார். மாலை பதிவு செய்யப்பட்டது. உயிலில் அனைத்தும் எழுதியிருக்கும் அதை ஆஜர்படுத்தினால் எந்தெந்த சொத்துக்கள் பற்றி எழுதப்பட்ட விவரம் தெரியவரும். அந்த உயிலை ஆஜர்படுத்த தயாராக உள்ளேன். என் கணவர் இறந்துபோகும் நிலையில் தான் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டு உயில் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறக்கும் தருவாயில் இருக்கும்போது வாலாஜா சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. உயில் எழுதும் சமயத்தில் நல்லபடி இருந்தார். அந்த இரவே இறந்துவிட்டார். மருத்துவமனையில் என் கணவர்டிஸ்சார்ச் செய்யும்போது கொடுத்த மருத்துவ பதிவேடுகள் எதுவும் தற்போது என்னிடம் இல்லை. வாலாஜா சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் சென்று விவரங்களை வாங்கினேன். என் கணவர் இறந்து 4 வருடம் கழித்து நான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன். மாமனார் சொத்து குறித்து தகராறு ஏற்பட்டதால் நான் திமிரி காவல்நிலையத்தில் புகார் நான்தான் கொடுத்தேன். சொத்து சம்மந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில்

அனுகிக்கொள்ளுங்கள் என்று சொன்னதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)